நெல்லை புத்தகத் திருவிழாவில் நூல் வெளியீடு



நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றோர்.

திருநெல்வேலி, அக். 13: தமிழ்நாடு புத்தக விற்பனையாளர் சங்கம் சார்பில், பாளையங்கோட்டையில் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் பேராசிரியர் சௌந்தர மகாதேவன் எழுதிய 'விழுமியக் கல்வி' நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நூலை பதிப்பித்துள்ள நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மண்டல மேலாளர் மகேந்திரன் வரவேற்றார். சங்கரன்கோவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியின் முன்னாள் தமிழ்த் துறை தலைவர் வ.ஹரிஹரன் தலைமை வகித்து நூலை வெளியிட்டார். சதக்கத்துல் லாஹ் அப்பா கல்லூரி நூலகர் சரவணகுமார், முனைவர் வெங்கடலெட்சுமி ஆகியோர் நூரின் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். மதிதா இந்துக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் முத்துலெட்சுமி, நூலைத் திறனாய்வு உரையாக வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற தமிழ்நாடு புத்தக விற்பனையாளர் சங்க உறுப்பினர் வீரபாலன் 'திருநெல்வேலியும் வாசிப்பு இயக்கமும்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் மாணவர் நலன் வளர்ச்சித் துறையின் புல முதன்மையரும், தமிழ்த் துறை தலைவருமான சௌந்தர மகாதேவன் ஏற்புரை வழங்கினார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் திருநெல்வேலி மேலாளர் குமார் நன்றி கூறினார்.

ஆய்வு...



வடகிழக்கு பருவமழையையொட்டி திருநெல்வேலி மாநகர பகுதிகளில் நோய்த் தடுப்பு நடவடிக்கையாக கொசு தடுப்பு புகை மருந்து அடிக்கும் பணியை துரிதப்படுத்தும் வகையில் இயந்திரங்களை ஆய்வு செய்தார் மாநகர நல அலுவலர் பாலசுப்ரமணியன்.

'வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தயார்'

திருநெல்வேலி, அக். 13: வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என்றார் மேயர் கோ.ராமகிருஷ்ணன்.

திருநெல்வேலி சந்திப்பில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் ஓடை பாலப் பணியை செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த பின்பு செய்தியாளர்களிடம் மேயர் கூறியது: 2023 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்தை மழைநீர் சூழ்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. வணிகர்கள் பெரும் சேதங்களைச் சந்தித்தனர். இதனால் சந்திப்பு பகுதியில் உள்ள வாருகால்களை முழுவதும் தூர்வாரி விரிவாக்கம் செய்ய முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் 4 கட்டங்களாக இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் இருந்து த.மு. சாலை வழியாக சிந்துபூந்துறையில் தாமிரவருணி ஆற்றுக்கு மழைநீர் செல்லும் வகையில் ஓடைப் பணி நடைபெறுகிறது. இதில் குறிப்பாக மதுரை சாலையில் உள்ள பாலம் முற்றிலும் அப்புறப்படுத்தப்பட்டு, புதிதாக பெரிய பாலமாகக் கட்டப்பட்டு வருகிறது. ஓடை மற்றும் பாலப் பணிகளில் 60 சதவிகிதம் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள 40 சதவிகித பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. மாநகரப் பகுதியில் பொதுமக்கள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை மழைநீர் வடிகால் ஓடைகளில் வீசுவதைத் தவிர்க்க வேண்டும். வணிக நிறுவனத்தினர் குப்பைகளை ஓடைகளில் வீசினால் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளருக்கோ அல்லது வீட்டின் உரிமையாளருக்கோ அபராதம் விதிக்கப்படும் என்றார் அவர்.

பேட்டியின்போது மாமன்ற உறுப்பினர்கள் சுந்தர், வில்சன் மணித்துரை மற்றும் பலர் உடனிருந்தனர்.



திருநெல்வேலி சந்திப்பில் பாலம் அமைக்கும் பணியை செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார் மேயர் கோ.ராமகிருஷ்ணன்.

நெல்லை அருகே சுமைப்பணி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

திருநெல்வேலி, அக்.13: மதுபானப் பெட்டிகளை ஸ்கேன் செய்யும் பணிக்கு கூலி வழங்க வலியுறுத்தி முன்னீர்பள்ளம் டாஸ்மாக் கிடங்கு முன் சிஐடியு சுமைப்பணித் தொழிலாளர்கள் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, சுமைப்பணித் தொழிலாளர் சங்க திருநெல்வேலி மாவட்டப் பொதுச் செயலர் முருகேசன் தலைமை வகித்தார். சிஐடியு மாவட்டத் தலைவர் முருகன் தொடங்கி வைத்துப் பேசினார். சுமைப்பணி விநியோகத் தொழிலாளர் சங்கச் செயலர் ராமானுஜம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

மதுபானப்பெட்டிகளை ஸ்கேன் செய்யும் பணிக்கு உரிய கூலி வழங்குவது, மதுபானப் பெட்டி ஏற்றுக் கூலியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.5-ஐ ஒப்பந்த விதிகளில் குறிப்பிடுவது, கிடங்குகளில் மேற்கூரை, பாதுகாப்பு உபகரணங்கள், குடிநீர், கழிவறை, ஓய்வறை மற்றும் தார்ச் சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது, தீபாவளி போனஸை 10 நாள்களுக்கு முன்பே வழங்குவது, 2027 ஜனவரி முதல் இறக்கு கூலியை உயர்த்த நடவடிக்கை எடுப்பது, 38 ஆண்டுகள் பழமையான திருநெல்வேலி டாஸ்மாக் கிடங்குக்குப் பதிலாகப் புதிய கட்டடம் கட்டித் தருவது என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தியாகராஜ நகர் சுற்று வட்டாரங்களில் நாளை மின்தடை

திருநெல்வேலி, அக். 13: பாளையங்கோட்டை தியாகராஜ நகர் சுற்று வட்டாரங்களில் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது.

இது தொடர்பாக திருநெல்வேலி நகர்ப்புற கோட்ட செயற்பொறியாளர் ரவி ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பாளையங்கோட்டை தியாகராஜ நகர் துணை மின் நிலையத்தில் வரும் வியாழக்கிழமை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறவுள்ளன. எனவே, தியாகராஜ நகர், மகாராஜ நகர், ராஜகோபாலபுரம், சிவந்திப்பட்டி, குத்துக்கல், கொடிக்குளம், முத்தூர், ஐஓபி காலனி, தாமிரபதி காலனி, மல்லிகா காலனி, ஸ்ரீராமன் குளம், ஆயுதப்படை, கோரிப் பள்ளம், ரயில்வே பீடர் சாலை, இ.பி. காலனி, ராஜேந்திரன் நகர், ராம் நகர், காமராஜர் சாலை, அன்பு நகர், என்.ஹெச்.காலனி, சித்தார்த் நகர், லக்கி காலனி சுற்று வட்டாரங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது.

பாளை. அருகே 9 ஏக்கர் ஆக்கிரமிப்பு நிலம் மீட்பு

திருநெல்வேலி, அக். 13: பாளையங்கோட்டை அருகே 9 ஏக்கர் அரசு நிலத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் வருவாய்த் துறையினரால் அகற்றப்பட்டது.

பாளையங்கோட்டை அருகே உத்தமபாண்டியன்குளம் கிராமத்தில் சுமார் 9 ஏக்கர் பரப்பளவிலான அரசு புறம்போக்கு காலியிடத்தை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் சுத்தம் செய்தும், கற்கள் நட்டும், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்ட அறைகள் மற்றும் கம்பிவலை வேலி அமைத்தும் ஆக்கிரமிப்பு செய்தனர். இது குறித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மேலப்பாளையம் வருவாய் ஆய்வாளர் அளித்த அறிக்கையின் அடிப்படையில் அக்.12 ஆம் தேதி ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த் துறை தரப்பில் முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் அறிவுறுத்தலின்படி, திங்கள்கிழமை காலை ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை காலை விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பு கோரிக்கை மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது. இதையடுத்து மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் ஆலோசனைப்படி, பாளையங்கோட்டை வட்டாட்சியர் மாரிராஜா மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் போலீஸ் பாதுகாப்புடன் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி நடைபெற்றது. இதையடுத்து நீதிமன்ற உத்தரவுபடி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த சுமார் ரூ.18 கோடி மதிப்பிலான 9 ஏக்கர் அரசு நிலம் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

போலி செயலி மூலம் கைப்பேசியை முடக்கி ரூ.7.50 லட்சம் மோசடி

திருநெல்வேலி, அக். 13: போலி செயலி மூலம் கைப்பேசியை முடக்கி மருத்துவரின் பெற்றோர் வங்கிக் கணக்கில் இருந்து ரூ.7.50 லட்சம் மோசடி செய்த மர்மநபர்கள் குறித்து மாவட்ட சைபர் கிரைம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சேரன்மகாதேவி அருகே உள்ள கங்கனான்குளத்தைச் சேர்ந்தவர் 30 வயது மருத்துவர். இவரது பெற்றோர் அப்பகுதியிலுள்ள வங்கியில் இணைப்புக் கணக்கு வைத்துள்ளனர். கடந்த ஆகஸ்ட் மாதம் அவரது தாயின் கைப்பேசிக்கு அழைத்த மர்மநபர், வங்கி மேலாளர் பேசுவதாகக் கூறி அவரிடமிருந்து ஏ.டி.எம் அட்டை விவரங்களைப் பெற்று அதன் மூலம் சுமார் ரூ.41 ஆயிரத்தை மோசடியாக எடுத்துள்ளார். இதுகுறித்து ஆன்லைன் புகார் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 9 ஆம் தேதி அவரது தாயாரின் கைப்பேசியை மர்மநபர்கள் போலி செயலி மூலம் முடக்கினராம். பின்னர் அவரது பெற்றோரின் இணைப்பு மற்றும் தனி வங்கிக்கணக்குகளில் இருந்து மோசடியாக சுமார் ரூ.7,50,586-ஐ எடுத்துள்ளனர். இது குறித்து மருத்துவர் அளித்த புகாரின் பேரில் மாவட்ட சைபர்கிரைம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பொன்னாக்குடி அருகே விபத்து: ஆட்டோ ஓட்டுநர் பலி

திருநெல்வேலி, அக். 13: பொன்னாக்குடி அருகே நிகழ்ந்த விபத்தில் ஆட்டோ ஓட்டுநர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

பாளையங்கோட்டை மூளிக்குளம் பகுதியைச் சேர்ந்த பாக்கிய ராஜ் மகன் தங்கராஜ் (43). ஆட்டோ ஓட்டுநரான இவர், பொன்னாக்குடி அருகே திருநெல்வேலி-கன்னியாகுமரி நான்குவழிச் சாலையில் சென்று கொண்டிருந்தாராம். அப்போது அடையாளம் தெரியாத வாகனம் ஆட்டோ மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றதாம். இதில் பலத்த காயமடைந்த தங்கராஜை மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் உயிரிழந்தார். இதுகுறித்து முன்னீர்பள்ளம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகிறார்கள்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

கேட்பு அறிவிப்பு

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்க விதி, 2002, 13(2)-ன் கீழ் அறிவிப்பு.
(பிணையநல (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 3(1)-ன் படி இனி "சட்டம்" r/w என்று குறிப்பிடப்படும்)

உத்தரவாதி / காமம்சென்ற கடன்தாரர் மேட்.திரு.T.ரவிக்குமாருடைய சட்ட வாரிசுகள்.

1) **Ms.N.பாப்பா**, W/o.மேட்.T.ரவிக்குமார், 41-C, சுதர்சனம் பழ வினை, நெல்வேலி கீழக்கு விளவன்கோடு, கன்னியாகுமரி, தமிழ்நாடு-629162.
மேலும் வசிப்பிடம்: 1/69, வைத்தியவாலி வீடு, நெல்வேலி, கொளஞ்சி, முலம்குழி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629162.

2) **Ms.R.P.ஷெர்லி**, (D/o.மேட்.T.ரவிக்குமார், மைனர் மற்றும் அவருடைய அம்மா & இயற்பாதுகாவலர் Ms.N.பாப்பா) 41-C, சுதர்சனம் பழ வினை, நெல்வேலி கீழக்கு விளவன்கோடு, கன்னியாகுமரி, தமிழ்நாடு-629162.
மேலும் வசிப்பிடம்: 1/69, வைத்தியவாலி வீடு, நெல்வேலி, கொளஞ்சி, முலம்குழி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629162.

3) **திருமதி.செம்மம்மாள்**, M/o.மேட்.T.ரவிக்குமார், 1/69, வைத்தியவாலி வீடு, நெல்வேலி, கொளஞ்சி, முலம்குழி P.O., கன்னியாகுமரி, தமிழ்நாடு-629162.

திரு. T.ரவிக்குமார் (இறந்தவிட்டபடியால் தற்போது அவருடைய சட்டவாரிசுகளான முகவரிதாரர் எண்.1 முதல் 3 வரையிலானோர் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர்), கடன்தாராராகவும் மேலும் உங்களில் முகவரிதாரர் எண்.3-க்குரியவர் உத்தரவாதியாகவும் இருந்து, தி சௌத் இந்தியன் வங்கியில் லிமிடெட். இதன் பதிவு அலுவலகம்: SIB ஹவுஸ், T.B. ரோடு, திருச்சூர்-680001. கேரளா மற்றும் மதுரையில் உள்ள இதன் பிராந்திய அலுவலகங்களில் ஒன்று: முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016 மற்றும் நாகர்கோவிலில் உள்ள இதன் கிளை அலுவலகங்களுள் ஒன்று: 6/1-50C, தரைத்தளம், கேப் ரோடு, (வேப்பமூடு ஜங்ஷன் பார்க் எதிரில்), சுந்தர் ரேடியோஸ் அருகில், நாகர்கோயில், கன்னியாகுமரி-629001 என்ற விலாசக் கிளையிலிருந்து தேவையான ஆவணங்களின் மூலம் 03.04.2014 அன்று ரூ.15,00,000/- வீட்டுக்கடன் [A/c.No-0053655000000593] பெற்றுள்ளீர்கள். மேலும் இக்கடன்களுக்காக, அட்டவணையில் கண்ட சொத்துக்கள் பிணையப்படுத்தப்பட்டுள்ளது. (இனி பிணையச் சொத்துக்கள் என குறிப்பிடப்படும்).

மேற்குறிப்பிட்ட கடன் கணக்கு 01.11.2025-லிருந்து வங்கியால் வாராக்கடன் சொத்து (NPA) என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வங்கியானது சட்டப் பிரிவு 13(2)-ன்கீழ் 31.12.2025 அன்று வழங்கிய அறிவிப்பில், முகவரிதாரர் எண்.3-க்குரியவர் உத்தரவாதியாகவும்/காமம்சென்ற கடன்தாரரின் சட்டவாரிசு மற்றும் முகவரிதாரர் 1&2 (மேட்.ரவிக்குமாரின் சட்டவாரிசுகளாக மேட்.ரவிக்குமாரிடமிருந்து வாங்கியிருமையாக பெறப்பட்ட எஸ்டேட் சொத்தின் அளவிற்கு) ஆகியோரிடமிருந்து வீட்டுக்கடன் தொடர்பாக [A/c.No-0053655000000593] 30.12.2025 தேதிப்படி நிலுவைத் தொகை ரூ.7,70,466.42 (ரூபாய் ஏழு லட்சத்து எழுபதாயிரத்து நானூற்றி அறுபத்தாறு மற்றும் பைசா நாற்பத்திரண்டு மட்டும்) பின்வட்டி மற்றும் பொருந்தக்கூடிய அபராத கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தும்படி கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் உங்களில் முகவரிதாரர் எண்.1-லிருந்து எண்.3 வரையிலானோர் எமது அறிவிப்பினை தவிர்த்துவிட்டதால் பிணையநல (அமலாக்க) விதிகள் 2002-ன் விதி 3(1)ன்படி இந்தப் பொது அறிவிப்பு வழங்கப்படுகிறது.

ஆகையால், தங்களது சகல பாக்கிகளையும் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கடன்களை முழுமையாகத் தீர்க்காத பட்சத்தில், தங்களுக்கு மேலும் முன்னறிவிப்பு ஏதுமின்றி இருந்த் சட்டத்தின் விதிகளின்படி தங்களுடைய பிணையச் சொத்தின் மூலமாக, சட்டவிதி 13(4)-ன் கீழ் ஏதேனும் ஒன்று அல்லது அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க நேரிடும்.

உங்களில் அனைவரும் மேலும் கவனிக்க வேண்டியது என்னவென்றால், மேற்கூறிய பத்திரங்களை அப்புறப்படுத்தல் அல்லது கையாளுதல் அல்லது விற்பனை மூலம் மாற்றுதல், குத்தகை அல்லது வேறு விதத்திலோ (சாதாரண வணிகம் தவிர) எழுத்துப்பூர்வ முன் அனுமதியின்றி பிணையச் சொத்துக்களை பரிமாற்றம் செய்வதில் இருந்து தங்களுக்கு சட்டபிரிவு 13(13)-ன்படி கட்டுப்பாடு/தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியவும்.

சட்டப்படி கடன்தாரர்களுக்கு எதிராக தி சௌத் இந்தியன் வங்கிக்கு கிடைக்கக்கூடிய உரிமைகள் மற்றும் நிவாரணங்களுக்கு பாதிப்பின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

அட்டவணை

அசையாச் சொத்து விபரம்: கன்னியாகுமரி மாவட்டம், விளவன்கோடு தாலுகா, கொளஞ்சி கிராமத்தின் Re.S.No.331/9-ல் அமைந்துள்ள கட்டிடத்துடன் கூடிய 11.250 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன் அதிலுள்ள அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதிருக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு.T.ரவிக்குமார் (இறந்தவிட்டபடியால் தற்போது அவருடைய சட்டவாரிசுகளால் குறிப்பிடப்படுகிறார்) என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து. பள்ளியடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.12.2013 அன்று பதிவு பெற்ற செட்டில்மெண்ட் பத்திர எண்.2854/2013-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கு: ரோடு. கிழக்கு: செல்வராஜுடைய சொத்து. தெற்கு: வள்ளியம்மாளுடைய சொத்து. மேற்கு: ஆம்ரோஸுடைய சொத்து.

இடம்: கன்னியாகுமரி
தேதி : 09.10.2026

Sd/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
(முதன்மை மேலாளர்)

ஓய்வூதியரிடம் ரூ.28.50 லட்சம் மோசடி: 3 பேர் கைது

திருநெல்வேலி, அக். 13: திருநெல்வேலியைச் சேர்ந்த ஓய்வூதியரிடம் இணையவழியில் ரூ.28.50 லட்சம் மோசடி செய்ததாக 3 பேரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

தச்சநல்லூர் அருகேயுள்ள சேந்திமங்கலத்தைச் சேர்ந்தவர் அனந்தப்பன் (61). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் டிக்கெட் பரிசோதகராக பணியாற்றி ஓய்வுபெற்றவர். இவரது கைப்பேசி எண்ணிற்கு கடந்த 6 ஆம் தேதி மர்ம நபர் தொடர்பு கொண்டு, மும்பையில் உள்ள என்.ஐ.ஏ. காவல் துறையைச் சேர்ந்தவர் எனக் கூறி மிரட்டியுள்ளார். அடுத்தடுத்த நாள்களில், தீவிரவாதிகளுடன் உங்களது வங்கிக் கணக்கில் இருந்து பரிவர்த்தனை நடந்துள்ளதாக கூறியதோடு, டிஜிட்டல் கைது செய்வதாக மிரட்டியுள்ளனர். பின்னர் இணையவழியில் ரூ.28 லட்சத்து 50 ஆயிரம் பெற்று ஏமாற்றியுள்ளனர்.

இதுகுறித்த புகாரின்பேரில் திருநெல்வேலி மாநகர சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். மோசடியில் ஈடுபட்டது கேரள மாநிலத்தைச் சேர்ந்த 3 பேர் கும்பல் என்பது தெரியவந்தது. இதையடுத்து அங்கு தனிப்படையினர் சென்று எர்ணாகுளம் மாவட்டம், நெடுவெளிகாட்டைச் சேர்ந்த ரவிக்குமார் (52), விஸ்வபுரத்தை சேர்ந்த தினேஷ் (52), கண்ணூர் மாவட்டம், எடக்காடு பகுதியை சேர்ந்த அப்துல் சமது (50) ஆகியோரை கைது செய்தனர்.

விபத்து வழக்கில் கார் ஓட்டுநர் கைது

திருநெல்வேலி, அக். 13: பாளையங்கோட்டையில் விபத்து வழக்கில், கார் ஓட்டுநரை போலீஸார் கைது செய்தனர்.

பாளையங்கோட்டை அருகே உள்ள உத்தமபாண்டியன்குளத்தை சேர்ந்த விவசாயி முத்துசரவணன் (49). இவர் கடந்த செப்.10 ஆம் தேதி பாளையங்கோட்டை, முருகன்குறிச்சி பகுதியில் பைக்கில் சென்றபோது, பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாம். இதில் காயமடைந்த முத்துசரவணன், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து மாநகரப் போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து, காரை ஓட்டிய அனந்தகிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த முத்துசெல்வம் (25) என்பவரை திங்கள்கிழமை கைது செய்தனர்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி மாவட்டம்
தூய்மை பாரத இயக்கம் (கிராமின்)
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. முழுமையான விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்களால், தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின்கீழ் அரூர் ஊராட்சி ஒன்றியம், பெரியப்பட்டி கிராம ஊராட்சி, மலக்கசடு மேலாண்மை கழிவகற்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறை முறை வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை http://tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில், இலவசமாக, 13.10.2026 முதல் 30.10.2026 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள் :
   (i) மின் ஒப்பந்த படிவம் பதிவேற்றம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 30.10.2026 மாலை 3.00 மணி
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் :
   30.10.2026 மாலை 4.00 மணி முதல்

செ.மு.தொ.இ.3115/ஒப்பந்தப்புள்ளி/2026

இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி

கஞ்சா வழக்கில் இளம்பெண் கைது

திருநெல்வேலி, அக். 13: திருநெல்வேலி மாநகரில் சுமார் 1.250 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் இளம்பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.

திருநெல்வேலி நகரம் உழவர் சந்தை பகுதியில் விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்ததாக, அதே பகுதியில் முத்துராமலிங்கபுரத்தை சேர்ந்த மாரிமுத்து மகன் தங்கதுரை (23) என்பவரை போலீஸார் கடந்த மாதம் கைது செய்தனர். அவரிடமிருந்து சுமார் 1.250 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. தங்கதுரையிடம் நடத்தப்பட்ட விசாரணையில், திருநெல்வேலி அருகே உள்ள துறையூரைச் சேர்ந்த பிரியங்கா (31) என்பவருக்கும் இவ்வழக்கில் தொடர்பிருப்பது தெரியவந்தது. அவரை திருநெல்வேலி நகரம் போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

பைக் விபத்தில் தனியார் நிறுவன ஊழியர் உயிரிழப்பு

திருநெல்வேலி, அக். 13: கங்கைகொண்டான் அருகே பைக்கில் இருந்து தவறி விழுந்த தனியார் நிறுவன ஊழியர் உயிரிழந்தார்.

திருநெல்வேலி மாவட்டம், மானூர் அருகே உள்ள கீழபிள்ளையார்குளத்தைச் சேர்ந்தவர் சுடலைமணி மகன் பூசைப்பாண்டியன் (32). கங்கைகொண்டான் பகுதியில் உள்ள தனியார் நிறுவன ஊழியர். செவ்வாய்க்கிழமை மாலை கங்கைகொண்டான் சிப்காட் அருகே இவர் பைக்கில் சென்றபோது கீழே தவறி விழுந்து படுகாயமடைந்தாராம். உடனடியாக அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். சிறிது நேரத்தில் பூசைப்பாண்டியன் உயிரிழந்தார். இது குறித்து கங்கைகொண்டான் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சீவலப்பேரி அருகே இளைஞர் தற்கொலை

திருநெல்வேலி, அக். 13: சீவலப்பேரி அருகே இளைஞர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

சீவலப்பேரி அருகேயுள்ள பதினாலாம்பேரி கிராமத்தைச் சேர்ந்தவர் இசக்கிமுத்து (22). இவர், குடும்பத் தகராறு காரணமாக வீட்டில் தூக்கிட்டாராம். அவரை மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். இது குறித்து சீவலப்பேரி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623, Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.o. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.11.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கன்னியாகுமரி, அஞ்சுகிராமம் கன்னியாகுமரி, 0117920700059232, 9763, 9956, 9975, 9981, 9992, 0021, 0024, 0031, 0117920730019679, பீச் ரோடு நாகர்கோயில், 0125250700050506, 0548, 0556, 0564, 0582, 0585, 0586, 0125250730011063, 1085, 1112, 1115, கன்னியாகுமரி, 0102100700774655, 4656, 4664, 0202, கொளச்சல், 0102130700781497, 1498, 1575, 2506, 2552, 2600, கோட்டார் நாகர்கோயில், 0102490700757983, 7990, 8002, 8003, 8014, 8037, 0102490730007288, 7289, 7297, 7296, 7299, 7300, 7301, 7302, குழித்துறை, 0102890700036844, 6845, மணலிவிளை அருமனை , 0129360700044965, 4971, 4978, 4998, 5001, 5007, 0129360730005160, மார்த்தாண்டம், 0126900700043112, 3116, 3118, 3206, 3210, 3217, 0126900730012364, 2376, 2404, மேக மண்டபம், 0133260700045581, 5615, 5627, 5648, 0133260730005617, 6115, மேல்புறம், 0134370700025214, 5367, 0134370730010345, 0351, எள் எம் ரோடு மார்த்தாண்டம், 0102810730005183, 5190, நாகர்கோயில், 0124420700040115, 0116, 0157, நாகர்க